Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

10.01.2021 ஞாயிற்றுக்கிழமை

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 10
வடக்கு மாகாணத்தில் வவுனியா நகரைச் சேர்ந்த 7 பாடசாலைகளைத் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் யாவும்

2



பல்கலை மாணவர்களின்

## உணவு ஒறுப்புப் போராட்டத்தில் யாழ்.இந்து மாணவனும் இணைவு

**பல்கலை மாணவர்களால் இன்று மாலை வீட்டுக்கு அனுப்பி வைப்பு**

யாழ்ப்பாணம், ஜன. 10
முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமையை கண்டித்தும் அந்த நினைவுத்தூபியை மீண்டும் அதே இடத்தில் நிறுவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் யாழ். பல்கலை மாணவர்கள் 9 பேர் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களின் போராட்டத்துக்கு

2

## இரண்டாம் நாளாகவும் தொடர்கின்றது போர்!

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி உடைக்கப்பட்டமைக்கு எதிராக யாழ்ப்பா

2



## நினைவுத் தூபி இடிப்பு அரசின் காடைத்தனம்!!

*கொந்தளிக்கிறது ஜே.வி.பி.*



கொழும்பு, ஜன. 10
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை பல்கலைக்கழக நிர்வாகம் இடித்தழித்ததை வன்மை

2

# நாளைய ஹர்த்தாலை வெற்றியடையச் செய்யுங்கள்

**தமிழ், முஸ்லிம் தலைவர்கள் வடக்கு கிழக்கு மக்களிடம் கூட்டாக வேண்டுகோள்**



யாழ்ப்பாணம், ஜனவரி 10
முள்ளிவாய்;க்கால் தூபி இடித்தழிக்கப்பட்டமையை கண்டித்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு அனைத்து மக்களும் தங்களால் முடியுமானளவு ஒத்துழைப்பை வழங்கி அதனை வெற்றியடையச் செய்யவேண்டும்.

2

மட்டக்களப்பில்

## கடத்தப்பட்டு மோசமாக தாக்கப்பட்ட தமிழர்கள்

*அத்துமீறிய சிங்களவர்களே காரணம் என்று குற்றச்சாட்டு*

மட்டக்களப்பு, ஜன. 10
மட்டக்களப்பு மயிலத்தமடு மற்றும் மாதவணை எல்லை பகுதியில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக பயன்படுத்திய மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியமர்த்தப்பட்டுள்ள

10

## பல்கலை விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்துக

*சரத் வீரசேகர காட்டம்*

கொழும்பு, ஜன. 10
இறந்த பயங்கரவாதிகளை நினைவு கூரும் தூபியை யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் இடித்துத் தரைமட்டமாக்கியமையை நான் வரவேற்கின்றேன். நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் மறைந்து வாழும் முன்னாள் பயங்கரவாதிகளின் நிகழ்ச்சி நிரலின்படி யாழ். பல்கலைக்

2

## தூபியை மீளக்கட்டுவாராம் பல்கலை துணைவேந்தர்

**சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜன. 10
முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டது எனக்கும் கவலைதான். அது மேலிடத்தின் உத்தரவிலேய இடிக்கப்பட்டது. அதற்காக ஆதாரமுள்ளது. இடிக்கப்பட்ட தூபியை மீள கட்டுவேன் என்று யாழ்ப்பாண பல்கலைகழக துணைவேந்தர் என்னிடம் தெரிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மாணவர்கள் முன்பாகக் கூறினார்.

10



தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின்

## 47ஆவது ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி

2

## தூபி இடிப்புக்கு மன்னிப்பு கோருகிறது பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 10
பல்கலைக் கழகமானது சமூகத்துடன் இணைந்து இயங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். நாம் சமூகத்தை புறந்தள்ளி மமதையுடன் செயற்பட முடியாது. நாளைதிங்கட்கிழமை வடக்கு கிழக்கு தழுவிய நிலையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள பூரண வழமை மறுப்புக்கு எமது பரிபூரண ஆதரவை வழங்குகின்றோம். இவ்வாறு

4

## ஹக்கீமுக்கும் கொரோனா!

நெருங்கிப் பழகியவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 10
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# நாளைய ஹர்த்தாலை....

சிறுபான்மை சமூகத்தை கிள்ளுக் கீரையாக நினைத்து பந்தாட நினைக்கும் கோத்தபாய அரசுக்கு சரியான பதிலடியை இந்தப் போராட்டத்தின் ஊடாக வழங்கவேண்டும். இவ்வாறு தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கூட்டாகவேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**சம்பந்தன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிராகவும் அதை மீண்டும் நிறுவக் கோரியும் தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள பூரண ஹர்த்தால் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதன் பங்காளிக் கட்சிகளும் முழுமையான ஆதரவை வழங்குகின்றன. இந்தப் போராட்டம் வெற்றி பெற அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒருமித்து நின்று தமது எதிர்ப்பைக் காட்டவேண்டும், என்றார்.

**ரிசாத் பதியுதீன்**

ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் சமூகங்களாக இலங்கைச் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டுள்ளனர். ஆகக் குறைந்தது உயிரிழந்தோரை நினைவுகூரவும், நல்லடக்கம் செய்யவும் சிறுபான்மைச் சமூகங்கள் மறுக்கப்படுகின்றன. இவற்றுக்குப் பின்னால் ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகள் இல்லாமலிருக்காது. இவ்வாறான செயற்பாடுகளை ஜனநாயக ரீதியில் எதிர்ப்பதற்கு சிறுபான்மையினர் ஒன்றுபட வேண்டும். முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள மத ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, தமிழ்த் தலைமைகள் குரல் கொடுத்து வருவதை நாம் மறக்க முடியாது. எமக்குள் உள்ள சிறிய சிறிய பேதங்களை மறந்து ஒன்றுபடுமளவுக்கு பேரினவாதம், சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்குவதாகவே நாம் கருதுகிறோம்.

எனவே, நாளை வடக்கு, கிழக்கில் இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு முஸ்லிம்கள் பூரணமாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நமது நாட்டில், இந்த அரசினால் ஒடுக்கப்படும் சிறுபான்மையினர் என்ற உணர்விலும் முஸ்லிம்கள் இந்த ஹர்த்தாலை ஆதரிப்பது அவசியம்.

ஆளும் வர்க்கத்தின் அதிகாரக் கெடுபிடிகளிலிருந்து நமது சமூகங்கள் பாதுகாக்கப்படுவதற்கான உறுதியான அரசியல் அடித்தளங்கள், இந்த ஒத்துழைப்புக்களின் ஊடாக கட்டியெழுப்பப்படும் என நான் நம்புகின்றேன்.

**மனோகணேசன்**

வடக்கு கிழக்கில் நாளை இடம்பெறும் ஹர்த்தாலுக்கு கட்சி பேதமின்றி அனைத்து தமிழ் பேசும் மக்களும் ஓரணியில் நின்று முழு ஆதரவு வழங்கவேண்டும். ராஜபக்ச அரசின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கும் பொறுப்பற்ற அரச நிர்வாக முறைக்கும் எதிராக தமிழ் பேசும் மக்கள் மீண்டும் தமது எதிர்ப்புக்களை காட்ட வேண்டிய காலம் கனிந்து விட்டது. சிங்கள பௌத்த மக்களின் ஆதரவுடன் ஆட்சி பீடம் ஏறிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் அவர் தலைமையிலான அரசும் இன்று அம் மக்களின் ஆதரவை இழந்து வருகின்றனர்.

உலகத்தில் வெறுக்கத்தக்க ஜனாதிபதியாகவும் அரசாகவும் இந்த ஆட்சி ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் பௌத்த சிங்கள மக்களின் மனதை வெல்வதற்காக தமிழ் பேசும் மக்கள் மீதும் அவர்களின் உரிமைகள் மீதும் அவர்களின் அடையாள சின்னங்கள் மீதும் இந்த அரசு கை வைக்கத் தொடங்கியுள்ளது. அரசின் இந்த அடாவடித்தனத்துக்கு எதிராக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் ஒற்றுமையாக நின்று நாளைய ஹர்த்தால் போராட்டம் வெற்றியடைய ஆதரவு வழங்க வேண்டும்.

**நிசாம் காரியப்பர்**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அந்தக் கட்சியின் செயலர் நிசாம் காரியப்பர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

தூபி இடிக்கப்பட்டமை, முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு உள்பட சிறுபான்மை சமூகத்தின் உணர்வுகளை கொச்சைப்படுத்தி அவமதிக்கும் அரசின் செயற்பாட்டை கண்டித்து நாளை வடக்கு கிழக்கில் நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு நாமும் முழுமையான ஆதரவு வழங்குகின்றோம், என்றார். (ஓ,5,22)

## இரண்டாம்...

ணப் பல்கலைக் கழக மாணவர்களால் நடத்தப்பட்டுவரும் உணவொறுப்புப் போராட்டம் இரண்டாவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த 8ஆம் திகதி இரவு இடித்தழிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து அரசியல் பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் பின்னர் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக வீதி எதிர்ப்புப் போராட்டம் கைவிடப்படுகின்றது என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்தது. இதைத் தொடர்ந்து சில மாணவர்கள் அமைதியான முறையில் உணவொறுப்புப் போராட்டத்தை நடத்த முன்வந்தனர். நேற்று ஆரம்பமான இந்தப் போராட்டம் இரண்டாம் நாளாக இன்றும் தொடர்ந்தது. (மு20)

## பாடசாலைகள்...

2021ஆம் ஆண்டு கல்வி ஆண்டுக்காக நாளை இயங்கும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் எல்.இளங்கோவன் தெரிவித்தார். இதேவேளை, மேல் மாகாணம் மற்றும் முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் கல்விச் செயற்பாடுகள் நாளை ஆரம்பமாக மாட்டாது. தரம் 2 தொடக்கம் 13 வரையான வகுப்புகளே நாளை ஆரம்பமாகுமென கல்வி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,5)

## பல்கலை விவகாரத்தில்....

கழக தமிழ் மாணவர் பிரதிநிதிகள் செயற்படுகின்றார்கள். அவர்கள் திருந்தி நடக்க வேண்டும். அதேவேளை, தமிழ் அரசியல்வாதிகள், யாழ். பல்கலைக்கழக விவகாரங்களில் தலையிடுவதையும் உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக விவகாரங்களைக் கண்காணிக்கத் துணைவேந்தர் இருக்கின்றார்.

அவருக்கு எவரும் அறிவுரை சொல்லத் தேவையில்லை

## உணவு ஒறுப்புப்...

வலுச்சேர்க்கும் வகையில் யாழ். இந்துக்கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவனும் இணைந்து கொண்டார். எனினும் அவரது நலன் கருதி இன்று மாலை அவரை பல்கலைக்கழக மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். (ஓ)

## 47ஆவது ஆண்டு ...

மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 47ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம்பெற்றது. இதன்போது ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட களேபரத்தில் உயிரிழந்த 9பேர் நினைவுகூரப்பட்டனர். (ஓ,20)

## ஹக்கீமுக்கும்....

நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்குக் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதையடுத்து அவர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இந்தத் தகவலை அவர் தனது ருவிட்டரில் பதிவின் ஊடாக இன்று அறிவித்துள்ளார்.

கடந்த 10 நாள்களில் தன்னுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் தேவையான சுகாதாரப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகயை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவும் சில நாள்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ,22)

## நினைவுத் தூபி இடிப்பு....

யாகக் கண்டிக்கின்றோம். இது கோத்தபாய அரசின் உத்தரவின் பிரகாரம்தான் இடிக்கப்பட்டிருக்கலாம். பல்கலைக்கழகத்தின் தன்னிச்சையான முடிவு என்றால் இது ஏற்கனவே இடிக்கப்பட்டிருக்கும். எனவே அரசு ஓர் இனத்தை அவமதிக்கும் வகையில் தமது காடைத்தனத்தை காட்டக்கூடாது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். தென்னிலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பி. அமைத்துள்ள நினைவுத் தூபிகள் அகற்றப்படவில்லை. வடக்கில் தமிழ் மாணவர்கள் அமைத்த நினைவுத் தூபி அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு, பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளை அரசியல் சார்பாகவோ, கட்சி சார்பாகவோ பார்க்கவேண்டாம். நீங்கள் சொல்லும் சிலைகள் தியாகிகளை நினைவுகூர்ந்து அமைக்கப்பட்டவை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்தது அப்பாவிப் பொதுமக்களை, போரில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்து அமைக்கப்பட்டவை. இவற்றை அமைப்பதற்கு அந்தந்த இனம் சார்ந்தவர்களுக்கு உரிமை இருக்கின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்ட

நினைவுத்தூபியை பல்கலைக்கழக நிர்வாகம் இடித்தழித்ததை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது அரசின் உத்தரவின் பிரகாரம்தான் இடிக்கப்பட்டிருக்கலாம். பல்கலைக்கழகத்தின் தன்னிச்சையான முடிவு என்றால் இது ஏற்கனவே இடிக்கப்பட்டிருக்கும். எனவே அரசு ஓர் இனத்தை அவமதிக்கும் வகையில் தமது காடைத்தனத்தை காட்டக்கூடாது.

பல்கலைக்கழக நிர்வாகமும் மாணவர்களின் மனநிலையை புரிந்து கொண்டு தீர்மானத்தை எடுத்திருக்கவேண்டும். அது தொடர்பில் மாணவர்களுடன் கலந்துரையாடியிருக்கவேண்டும். மாணவர்களின் கோரிக்கைகளை வரவேற்கின்றோம். அவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும், என்று குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடிக்கப்பட்டது போர் நினைவுச் சின்னம் என்றும், பயங்கரவாதிகளை நினைவுகூரும் சின்னம் என்றும் ஆளும் கட்சியினர் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோது, அப்பாவி மக்களை நினைவுகூர்ந்து அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களுக்கு போர்ச் சின்னங்கள் என்ற பெயரையோ, பயங்கரவாதிகள் என்ற பெயரையோ சூட்டவேண்டாம். அரசும், அதற்கு துணைபோன பல்கலைக்கழக நிர்வாகமும் தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புவிக்கவேண்டும், என்றார். (ஓ,5,22)

# தாயகத்தில் நாளை கதவடைப்பு: போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம்

## நாடு கடந்த தமிழீழ அரசு அறைகூவல்

வொஷிங்ரன், ஜன. 10

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த தமிழினவழிப்பு நினைவுத்தூபி அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழர் தாயகத்தில் இடம்பெறவிருக்கின்ற கதவடைப்பு போராட்டத்துக்கு வலுச்சேர்ப்போம் என்று அறைகூவல் விடுத்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசு இணையவழி கவனவீர்ப்பு கண்டனக்கூட்டத்தையும் நாளை ஏற்பாடு செய்துள்ளது.

தமிழினவழிப்பின் அடையாளச் சின்னமாக விளங்கிய நினைவுத்தூபி, இலங்கை அரசின் உத்திரவுக்கிணங்க அழிக்கப்பட்டமையானது, உலகத்தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கோப உணர்வையும் வலியையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு என்பது இலங்கை அரசின் ஓர் அரச கொள்கையாக இருந்து வருகின்றதொரு நிலையில், தமிழின அழிப்பை நினைவுபடுத்தும் அடையாளங்கள், குருதி தோய்ந்த சிங்களப் பேரினவாதத்தின் கோர முகத்தை வெளிக்காட்டுபவையாக உள்ளன. இத்தகைய நினைவுச் சின்னங்கள் தமிழ்மக்களின் கூட்டு நினைவுகளில் சிங்கள ஆக்கிரமிப்பை என்றும் நினைவுபடுத்துபவையாகவும் உள்ளன. தமிழ் மக்களின் கூட்டு நினைவுகளில் இருந்து சிங்கள இனவாதப்பூதத்தின் இனவழிப்பையும், கோரமுகத்தையும் மெல்ல மெல்ல அகற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகவே யாழ். பல்கலைக் கழக நினைவுத்தூபி அழிக்கப்பட்ட சம்பவத்தை நோக்க முடியும் என நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.

சிங்கள அரச கட்டமைப்பால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர்தாயகத்தில் தமிழ்மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான அரசியல் வெளி இல்லை என்பதனை நினை வுத்தூபி அழிப்பு சம்பவம் மீளவும் வெளிக்காட்டியுள்ளதென தெரிவித்துள்ளது. (ஒ)



# தமிழ் பேசும் மக்கள் ஓரணியாக ஆதரியுங்கள்

### சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

வவுனியா, ஜன. 10

ராஜபக்ச அரசின் அடக்கு முறைக்கு எதிராக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு கதவடைப்பு போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக அமைத்த நினைவுத் தூபியை அகற்றுவது என்றால், அதற்கு முன்னர் சட்டவிரோதமாக தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடம்பெறும் குடியேற்றங்கள், காணி அபகரிப்புக்கள், பௌத்த மயமாக்கல், விகாரைகளை நிறுவுதல், காடழிப்பு என்பவற்றை தடை செய்ய வேண்டும். அதனை நிறுத்த வேண்டும். தமிழர் பகுதிகளில் தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தையும், நிலப்பரப்பையும் மாற்றியமைக்கும் வகையில் சட்டவிரோத செயற்பாடுகளை முன்னெடுக்கும் இந்த அரசு, நினைவுத்தூபியை அகற்றுவதற்கு மட்டும் புது வியாக்கியானத்தை கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள், உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என்று அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு ஹர்த்தாலுக்கு ஆதரவை வழங்கி அரசின் அடக்கு முறைக்கு எதிராக ஓரணியில் குரல் கொடுக்கவேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (ஒ,110)

# கோத்தபாய எனக்கு உயிர் அச்சுறுத்தல்!

### பாதுகாக்கக் கோரி பொலிஸ்மா அதிபருக்கு ஹரின் கடிதம்

கொழும்பு, ஜன. 10

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தனக்குக் கடுமையான உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதால், தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாமதமின்றி மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு இன்று அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் கேட்டுக்கொண்டுள்ளார். ஜனாதிபதியைத் தான் தொடர்ந்தும் விமர்சித்தால், தன்னை ஒரு நாயைக் கொலை செய்வதைப் போன்று கொலை செய்துவிட முடியும் என்று அம்பாறையில் உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்திருந்தார் எனவும் ஹரின் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஹரின் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் முழுப் பெயரைக் கூறி விமர்சித்திருந்தார்.

அதற்கு அம்பாறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் ஜனாதிபதி பதிலளிக்கும்போது, 'பித்தளைச் சந்தியில் என் மீது குண்டுத் தாக்குதல் நடத்திய பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்று தெரியும்தானே? நந்திக்கடல் களப்பிலிருந்து அவரின் உயிரற்ற உடலைத் தூக்கி வந்தார்கள். அப்படியும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதிகளை ஜே.ஆர்.ஜே., பிரேமதாஸ, டீ.பீ., சந்திரிகா, மஹிந்த அல்லது சிறிசேன என அழைக்கப்பட்டாலும், அவர்களில் ஒருவரும் அதற்காக அச்சுறுத்தல் விடுக்கவில்லை என்றும் ஹரின் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் கடமைகளில் இருந்து அவர் தவறும்போது, தான் விமர்சிக்கத் தயங்குவதில்லை என்று தெரிவித்துள்ள ஹரின் பெர்னாண்டோ, தனக்குப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ,22)

# சிறுபான்மைச் சமூகம் ஓரணியில் திரளட்டும்

### கதவடைப்புக்கான ஆதரவு அறிவிப்பில் வினோ எம்.பி. கோரிக்கை



வவுனியா, ஜன. 10

இந்த அரசு சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராக திட்டமிட்டு பல நகர்வுகளை மேற்கொள்கின்றது. அதன் ஓர் அங்கமாகவே நினைவுத் தூபி இடிப்பு அமைந்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை முன்னெடுக்கப்படும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் அனைவரும் ஓரணியில் திரண்டு ஆதரவளிக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தனக்கு இரு முகங்கள் உண்டு என்றும், தன்னை பாதுகாப்புச் செயலராகவே மக்கள் விரும்புவதாகவும் கூறியுள்ளார். இந்தக் கூற்றுக்கள் எல்லாம் எங்களை அச்சுறுத்தி, பயமுறுத்தி அடக்குவதற்காகவே சொல்லப்படுகின்றன.

இவற்றுக்கு நாம் அஞ்சக் கூடாது. ஒருமித்த குரலோடு எதிர்க்கவேண்டும். நாளை வடக்கு கிழக்கு முழுவதும் இயல்புமறுப்பு நிலை தோன்றவேண்டும். அதற்கு சகலரும் ஒத்துழைக்கவேண்டும்' என்றார் வினோ. (ஒ,110)

# கதவடைப்புப் போராட்டத்துக்கு கடற்றொழிலாளர்கள் பேராதரவு

யாழ்ப்பாணம், ஜன. 10

தமிழர் தாயகம் தழுவி நாளை முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் முழுமையான ஆதரவை வழங்குவதாக அதன் செயலர் நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (ஒ,20,26)

# முழு அடைப்புப் போராட்டத்துக்கு மன்னாரில் பல அமைப்புக்களும் ஆதரவு

மன்னார், ஜன. 10

வடக்கு, கிழக்கு தமிழர் தேசத்தில் நாளை இடம்பெறவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்களும் தமது பேராதவைத் தெரிவித்துள்ளன.

மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சிகையலங்கரிப்பாளர் சங்கங்கள், மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்கள், வணிக சங்கங்கள் என்று பல தரப்பினரும் ஆதரவுகளைத் தெரிவித்துள்ளனர். (ஒ,213)

### ஒடுக்குமுறைகளை ஏற்கோம்

# அரசின் காதுகளுக்கு முரசறைய ஹர்த்தாலுக்கு ஆதரவளிப்போம்

## சரவணபவன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதி என்ற வகையில் நாளைய ஹர்த்தாலில் அனைவரும் இணைந்து தமிழ் மக்கள் என்றுமே ஒடுக்கு முறைகளைத் தலைகுனிந்து ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்ற செய்தியை ஆட்சியாளர்களுக்கு உறைக்கும் வகையில் உணர்த்துவோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:



### கொதிநிலை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த, முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களின் நினைவுத் தூபி இரவோடிரவாக உடைக்கப்பட்ட சம்பவம் தமிழ் மக்கள் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டியுள்ளது. ஒவ்வொரு தமிழரின் குருதியையும் ஆற்ற முடியாத கொதிநிலைக்கு உட்படுத்தியுள்ளது.

அந்த நினைவுத்தூபி இறுதிப் போரில் முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்களதும் மாணவர்களின் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் மற்றும் உறவினர்கள் ஆகியோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயமா கும். எனவேதான் இது பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டு மாணவர்களால் அஞ்சலி செய்யப்பட்டு வருகிறது. இந்த நினைவாலயம் தகர்க்கப்பட்டதன் மூலம் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செய்யும் மாணவர்களின் உரிமை சவாலுக்குக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### பண்பாட்டுப் போர்

இது தமிழ் மக்களின் நினைவாலயத்தைத் தகர்த்த மனிதாபிமானமற்ற, மனித உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் ஒரு கொடுமை என்ற மட்டத்துக்குள் அடக்கிவிட முடியாது. அதற்கும் அப்பால் சங்ககாலம் தொட்டு வழக்கிலிருந்து வரும் நடுகல் வழிபாடு என்ற பண்பாட்டு விழுமியத்தின் மீது தொடுக்கப்பட்ட ஒரு யுத்தமாகவும் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் ஜனாதிபதியாலும் பிரதமராலும் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோசம் மீண்டும் மீண்டும் உரக்க எழுப்பப்படுகிறது. ஆனால் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு பெரும் புரட்சியை ஒரு முறை மட்டுமல்ல இருமுறைகள் மேற்கொண்ட ஜே.வி.பி. அமைப்பின் உயிரிழந்தவர்களுக்கான கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நினைவகம் அமைக்கப்பட்டு 1990ஆம் ஆண்டு தொட்டு அஞ்சலிக்கப்பட்டுகிறது. அதை ஆட்சியாளர்களோ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக நிர்வாகமோ தடுக்கவுமில்லை. நினைவிடத்தை தகர்க்கவுமில்லை. இது சிங்களவர்களுக்கு ஒரு சட்டம் தமிழருக்கு வேறு ஒரு சட்டமா? என்ற கேள்வியை எழுப்புகிறது. அப்படியானால் ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற ஆட்சியாளர்களின் கோசத்தின் அர்த்தம்தான் என்ன?

கண்டனத்துக்குரிய இந்த நடவடிக்கை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மேலிடத்தின் உத்தியோகபூர்வமான அறிவுறுத்தலுக்கு அமைவாகவே அதை மேற்கொண்டதாகவும் தான் அதைச் செய்யத் தவறியிருந்ததால் வேறு தரப்பினர் அதை மேற்கொண்டிருப்பர் எனவும் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

### கண்ணை குத்திய கைகள்

அதாவது இன ஒடுக்குமுறையாளர்கள் எங்கள் கைகளைக் கொண்டே எங்கள் கண்களைக் குத்தியுள்ளனர். அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பணியாற்றுபவர் என்ற முறையில் அவர் மேலிடத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. ஆனால் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவோ, இராணுவத்தினரோ தாம் எந்த உத்தரவுகளையும் பிறப்பிக்கவில்லை என்று அறிவித்திருக்கின்றனர். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஒரு தமிழர் என்ற முறையிலும் போரில் உயிரிழந்தவர்கள் அவரின் உறவுகள் என்ற வகையிலும் இறந்தவர்களை நினைவிடமமைத்து அஞ்சலிப்பதைத் தடை செய்வது மனித நீதியை மறுதலிக்கும் செயல் என்பதாலும் அவர் மேலிடத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியாதிருந்திருக்கலாம். அப்படியான நிலையில் அவரின் பதவி கூடப் பறிபோகக் கூடும். மக்களுக்காக இடம்பெற்ற போரில் உயிரிழந்தவர்களுக்காக அவர் தனது பதவியைப் பறி கொடுத்திருந்தால் எமது மக்கள் அவரை உயர் பான இடத்தில் ஏற்றிப் போற்றியிருப்பார்கள்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் விடுத்த அறிக்கையில் தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் எவ்வித பிரச்சினைகளுமின்றி ஒற்றுமையாகக் கல்வி கற்று வருகின்றனர் எனவும் போர் காலத்தில் இவர்களுக்குப் 10 அல்லது 11 வயது இருந்திருக்குமெனவும் இப்படியான நினைவி டயங்களை அமைப்பதால் போர் நினைவூட்டப்பட்டு நல்லிணக்கத்துக்குப் பக்கம் ஏற்பட்டு விடும் என்பதாலே பல்கலைக்கழக நிர்வாகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதெனவும் தெரிவித்திருந்தார்.

### முறுகல்

ஒரு பகுதி மாணவர்கள் தங்கள் உயிரி ழந்த உறவுகளை நினைவுகூர்ந்தால் ஏனைய மாணவர்களுடனான நல்லிணக்கம் இல்லாமல் போய் விடும் என்பது துர்நோக்கம் கொண்ட கற்பனை யாகும். கடந்த காலங்களில் இப்படியான அஞ்சலிகள் இடம்பெறும் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படவில்லை. மாறாகச் சிங்கள மாணவர்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்கியும் வந்தனர். அதுமட்டுமன்றி அவர் இந்தச் சம்பவம் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டது என்ற வகையில் வெளியிட்ட கருத்து நிர்வாகத்துக்கும் மாணவர்களுக்கு மிடையே முறுகலை ஏற்படுத்தும் தீய நோக்கம் கொண்டது என்பதும் அவதானிக்கப்பட வேண்டும்.

இப்படியான நிலையில் மாணவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் பல்கலைக்கழக முன்றிலில் கூடி நிர்வாகத்தினருடன் பேச வேண்டுமெனக் கோரினர். பொலிஸார் அனுமதியளிக்க மறுத்த நிலையில் அதிரடிப் படையினரும் வரவழைக்கப்பட்டனர்.

### ஆதரவு

தற்சமயம் மாணவர்கள் மீண்டும் நினைவுத்தூபி அமைக்க அனுமதிக் கப்பட வேண்டுமெனக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அதேவேளையில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நாளை ஹர்த்தால் நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

எனவே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை முழுத் தமிழ் மக்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதி என்ற வகையில் ஹர்த்தால் நடவடிக்கையில் அனைவரும் இணைந்து தமிழ் மக்கள் என்றுமே ஒடுக்குமுறைகளைத் தலைகுனிந்து ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்ற செய்தியை ஆட்சியாளர்களுக்கு உணர்த்துவோம், என்றுள்ளது. (ஒ)



# வடக்கு, கிழக்கு வாழ் மக்களே கதவடைப்புக்கு ஒத்துழையுங்கள்

## சாணக்கியன் எம்.பி. உருக்கமான வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்புக்கு வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து மக்களையும் ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரியுள்ளார்.

அன்றைய தினம் கடைகளை அடைத்து தற்போதைய அரசு தொடர்ச்சியாக சிறுபான்மை மக்களுக்கு எதிராக செய்கின்ற அநீதிகளுக்கு அனைவரும் ஒருமித்த குரலாக எதிர்ப்பைக் காட்டவேண்டும். பல்வேறு விடயங்களில் சிறுபான்மை மக்களை இந்த அரசு தொடர்ச்சியாக தாக்கிக்கொண்டு வருகின்றது. நாங்கள் எங்களுடைய எதிர்ப்பை இந்த இடத்தில் நிச்சயமாக தெரிவிக்க வேண்டும், என்று சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## தூபி இடிப்புக்கு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு ஊடக அறிக்கையை அனுப்பி வைத்துள்ளது.

'எமது பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற, 'இறந்தோர் நினைவுச் சின்னம்' இடித்தகற்றப்பட்டமை அதிர்ச்சி தரும் விடயமாகும். இந்த சம்பவத்தை தொடர்ந்து சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ள உணர்வலைகளை நாம் ஆழமாக புரிந்து கொண்டுள்ளோம். சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றுவதற்கு விடுக்கப்பட்ட பணிப்புரை வெளிப்படையான முறையில் பரவலான கலந்தாலோசனை மூலம் அனுகப்பட்டிருக்க வேண்டுமென நாம் கருதுகின்றோம். இந்தப் பணிப்புரை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தரால் பணிக்கப்பட்டவர்கள் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளனர். அன்றைய இரவில் பல்கலைக்கழகத்தை சார்ந்தவர்கள் குறிப்பாக எமது அங்கத்தவர்கள் எவராவது மனித நேய உணர்வாளர்களை புண்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருந்தால் நாம் மக்களிடம் மன்னிப்பு கோரவும் கடமைப்பட்டுள்ளோம்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றை கற்பிக்க எத்தனிக்கிறது அரசு

## மட்டக்களப்பு மாநகர முதல்வர் கண்டனம்

*யாழ்ப்பாணம், ஜன. 10*

தமிழ் இனத்தின் அடையாளங்களைச் சிதைக்கும் நடவடிக்கைகளின் ஊடாக அடுத்த சந்ததியினருக்குத் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றை கற்பிக்க இந்த அரசு முயல்வதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.



யாழ். பல்கலையில் அமைக்கப்பட்டுள்ள தூபி அழிப்புத் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அனுமதியில்லாமல் கட்டப்பட்ட எத்தனையோ நினைவுச் சின்னங்களும், இலங்கை இராணுவத்தின் அடையாளங்களும் இலங்கையில் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. அதிலும், ஜே.வி.பியின் கலவரத்தால் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுத் தூபிகளும் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்க, போரால் உயிர் நீத்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கு அல்லது நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கு உள்ள அடிப்படை மனித உரிமைகளைக்கூட இந்த அரசு தமிழ் மக்களுக்கு வழங்க மறுக்கிறது. தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அபிவிருத்தி என்னும் மாயையால் சரி செய்து விட முடியாது - என்றார். (ம)

# பல்கலை தூபி அழிப்பு; கோழைத்தமான செயல்

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் கண்டனம்

*யாழ்ப்பாணம், ஜன. 10*



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட தூபி அழிக்கப்பட்டமையானது அடிப்படை மனித நேயமற்ற கோழைத்தமான செயல் என்று தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாணம் மாநகர முதல்வாரன வி. மணிவண்ணன். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள் ளதாவது:

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த முள்ளிவாய்கால் நினைவுத் தூபி, இரவோடு இரவாக திருட்டுத்தனமாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் அனைத்து தமிழ் உணர்வாளர்களையும் சீண்டும் கோழைத்தனமானது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன். இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் உயிரிழந்த தமது உறவுகளைக்கூட நினைவுகூர முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத அடிப்படை உரிமை மீறல்' என்றார். (ம)

# அரசை ஆதரித்த அனைவரும் பொறுப்புச் சொல்ல வேண்டும்!

## தமிழீழ விடுதலை இயக்கம் கண்டனம்

*யாழ்ப்பாணம், ஜன. 10*



யாழ் .பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அகற்றப்பட்டமைக்கு எமது வலிகள், வடுக்கள், பாரம்பரியம், போராட்டம், தேசியம் என்பவற்றை மறந்து அரசுக்கும், அரசுடன் இணைந்தவர்களுக்கும் ஆதரவு வழங்கியவர்கள் பொறுப்புச்சொல்ல வேண்டும் என்று தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது தமிழீழ விடுதலை இயக்கம்.

அந்த அமைப்பின் பிரதித் தலைவரான பிரச்சான இந்திரகுமார் இது தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மக்களைக் கொல்வது மட்டுல்ல மக்களின் உணர்வுகளைச் சிதைப்பதும் ஒருவகை இன அழிப்பே. அந்த விடயத்தை இலங்கை அரசு மிகக் கச்சிதமாகக் கையாண்டு வருகின்றது. தமிழர்கள் தொடர்பில் அனைத்து விடயங்களையும் பயங்கரவாதம் என்ற பார்வையில் பார்த்து இந்த அரசு எமது மக்களை முடக்கி, அடக்கி வைக்கும் நிலைப்பாட்டையே கொண்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் கொல்லப்பட்ட எமது உறவுகளையும் பல்கலைக் கழக மாணவர்களையும், அதன் பணியாளர்களையும் நினைவு கூருவதற்காக அமைக்கப்பட்ட தூபியில் அரசு கைவைத்து அதன் இயலாமையை வெளிப்படுத்தியிருக்கின்றது. தூபி தற்போது அழிக்கப்பட்டிருப்பதானது எதிர்காலத்தில் இன்னும் எவ்வாறான செயற்பாடுகள் பல்கலைக்கழகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட இருக்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அத்துடன் எத்தனையோ பல்கலைக் கழகங்களில் மக்கள் விடுதலை முன்னணியின் போராட்ட நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தாம் சார்ந்த இனத்திற்கு ஒரு நியாயம் தமிழர்களுக்கு ஒரு நியாயம் என்ற தோற்றப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்றது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவைப்படாது. வெறுமனே அபிவிருத்தி மாயை பிடித்து அரசுடன் ஒட்டியிருக்கும் எம்மவர்கள் இதன் வலிகள் வேதனைகள் தொடர்பில் அறிவார்களா? அல்லது அறிந்தும் மௌனிகளாகவே இருப்பார்களா? அவர்கள் மௌனிகளாகத்தான் இருக்க முடியுமே தவிர அரசை எதிர்த்து மக்களுக்காக குரலெழுப்ப முடியாது - என்றுள்ளது. (ம150)

# இன ரீதியான அழிப்பின் இன்னொரு வடிவம் இது

## தவிசாளர் நிரோஷ் கண்டனம்

*யாழ்ப்பாணம், ஜன. 10*



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தூபி இடிக்கப்பட்ட சம்பவமானது தமிழ் மக்கள் மீது அரசு இனரீதியாக மேற்கொள்ளும் அழிப்பின் நடவடிக்கைகளுள் ஒன்றாகவே அமையும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளரும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

போரில் கொல்லப்பட்ட இலட்சக்கணக்கானவர்களை நினைவுகூரும் தூபி அரசின் உத்தரவுக்கு அமையவே இடிக்கப்பட்டது. இதை மேற்கொண்டதன் மூலம் மக்கள் கொல்லப்படுவதை எந்தளவு தூரம் அரசு ஏற்றுக்கொண்டதோ அந்தளவு தூரம் படுகொலைகளுக்கு பொறுப்புச்சொல்லவும் முடியாது என்ற தகவலை சர்வதேசத்திற்குச் சொல்லியுள்ளது. தமிழ் மக்கள் மீது அரசு இனரீதியாக மேற்கொள்ளும் அழிப்பின் நடவடிக்கைகளுள் ஒன்றாகவே இதனைப் பார்க்க முடியும். அரசுடனான போரில் கொல்லப்பட்ட ஜே.பி.வியினருக்கு நாட்டின் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களில் நினைவுத் தூபிகள் உள்ளன.

இந்தத்தூபிகள் பற்றியோ அங்கு இடம்பெறும் நினைவுகூரல்களையோ அரச இயந்திரம் தடுப்பதில்லை. தூபிகளை இடிப்பதில்லை. கார ணம், இன ரீதியிலான அணுகுமுறைகளே ஆகும். எமது பல்கலைக்கழகத்தில் உள்ள தூபி அழிக்கப்பட்டதன் மூலம் நினைவுகூரும் சுதந்திரத்தை மறுத்தல் என்பதற்கு மேலாக போரின் அடிப்படையிலான தடயங்கள் இருக்கக் கூடாது என்பதே அரசின் நோக்கம் என்றுள்ளது. (ம)

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தூபி இடிப்பு; விசாரணைக்கு முன்வர வேண்டும் டென்மார்க்!

*யாழ்ப்பாணம்;, ஜன. 10*



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த தமிழர்களது போர் நினைவிடம் தகர்க்கப்பட்டிருப்பதை டென்மார்க் அரசும் ஐரோப்பிய ஒன்றியமும் கண்டித்து இலங்கை இனப்படுகொலை மீது சுயாதீன விசாரணை நடத்துவதற்கு அழுத்தம் தர வேண்டும். இவ்வாறு கோரியிருக்கிறார் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான டென்மார்க் நாட்டின் உறுப்பினர் நிக்கோலாய் விலாம்சென். யாழ்ப்பாணச் சம்பவம் தொடர்பாகத் தனது சமூக வலைத் தளங்களில் வெளியிட்டிருக்கின்ற பதிவுகளிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'டென்மார்க்கில் பெரும்பாலானவர்களுக்கு இந்தப் பயங்கரமான வரலாறு தெரியாது. இலங்கையில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதுடன் தொடர்புபட்ட வகையில் 40 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பலர் இலங்கை இராணுவத்தினால் பாதுகாப்பு வலயங்கள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் குண்டுவீசிக் கொல்லப்பட்டனர். இது குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்துள்ளது. இலங்கை அரசு அதனை மறுத்து வருகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவிடத்தைத் தகர்த்துள்ளனர். டென்மார்க்கும் ஐரோப்பிய ஒன்றியமும் இந்த அழிப்பு நடவடிக்கையைக் கண்டிக்க வேண்டும். இலங்கை இனப்படுகொலை மீது சுயாதீன விசாரணை நடத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்' என்றார். (ம)

# காயங்களை குணப்படுத்த நினைவுத்தூபி அவசியம்!

*யாழ்ப்பாணம், ஜன. 10*

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் வேதனை தருகின்றது என்று பிரிட்டன் வெளிவிவகார அலுவலக இராஜாங்க அமைச்சர் தாரிக் அகமட் தெரிவித்தார்.

தனது ருவிற்றர் பதிவொன்றில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் காட்சிகளால் வருத்தம்.

இலங்கையின் போரில் பாதிக்கப்பட்ட அனைவரையும் மக்கள் நினைவில் வைத்திருப்பது முக்கியம். இது கடந்த கால காயங்களை குணப்படுத்தவும் நல்லிணக்கத்தை ஆதரிக்கவும் உதவுகிறது' -என்றுள்ளார். (ம)

# நினைவிடம் வெறும் கற்சுவர் அல்ல!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் காட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ் பல்கலைக்கழக முள்ளி வாய்க்கால் நினைவிடமானது உரிமைகள் மறுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட மக்களின் ஆத்ம உறைவிடம். இதை இடித்தமை மிகவும் கண்டனத் துக்கு உரியது என்று தனது கண்டன அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவில்லம் வெள்ளிக்கி ழமை இரவு இடித்து அழிக்கப் பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட் டது. அதை மீண்டும் அமைக்க வேண்டும் என்று மாணவர்கள் உணவொறுப்புப் போராட்டம் நடத்தி வருகின் றனர். இந்த நிலையிலேயே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தன் கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக யாழ் பல்கலைக்கழக சூழலை பல கோணங்களில் கோலங்களில் கண்டும், கலந்தும் வாழ்ந்தவரே தற்போ தைய துணைவேந்தர். ஆர் வக்கோளாறால்தான் அந்த இல்லம் அமைக்கப்பட்டுள் ளது என்ற அவரின் கூற்று கண்டனத்துக்கு உரியது.

முள்ளிவாய்க்கால் நினைவி டம் எவருக்கும் எந்தத் தீங்கை யும் ஏற்படுத்தாமல் உறவு களை இழந்தோருக்கு மன ஆறுதலை மட்டும் கொடுக் கும் இடமாகவே அமைக்கப் பட்டது.

அதனை அழித்தமை மிகுந்த கண்டனத்துக்கு உரியது - என் றுள்ளது. (ம)

# ஒவ்வொருவரினதும் ஆன்மாவும் ஆழமாகப் பாதிக்கப்பட்டுள்ளது

## சர்வதேச இந்து இளைஞர் பேரவை கண்டனம்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடந் தேறிய முள்ளிவாய்க்கால் தூபி இடிப்புச் செயலால் ஒவ்வொருவரினதும் ஆன்மாவும் ஆழமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலை வர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தன் கண்ட னத்தை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது:

ஆன்மாவோடு ஒன்றிய நினைவுகளை மனிதாபிமானமற்ற தன்மையுடன் அழித் தமை கண்டனத்துக்குரிய விடயம். திருடர் கள்போலே இரவோடு இரவாக மக்கள் ஆன்மாக்களை ஆட்டம்காணச் செய்த செயல் உலகத்தில் இன்னுமோர் ஆறாதவ டுவை ஏற்படுத்தியுள்ளது.

எமது இனத்தைத் தொடர்ந்தும் ஒடுக்கு கின்ற செயற்பாட்டையே இவ்வாறான செயல்கள் காட்டுகின்றன. மாபெரும் தேசிய சொத்தாக விளங்கிய பல்கலையி லேயே இந்த நிகழ்வு நடந்தேறியமை ஒவ்வொருவரையும் ஆழமாகப் பாதித்துள் ளது. இவ்வாறான அநீதிகளைக் கண்டு அமைதியாக இருக்க முடியாதுள்ளது. இது ஒரு வரலாற்றுத் தவறு - என்றார். (ம-110)



# தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வினையாற்றுக!

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி இடிப் புத் தொடர்பில் அனைத்து தமிழ் மக்களும் அரசியல் தரப்புக்களும் பல்கலைக் கழகச் சமூகமும் ஒன்றுபட்டு வினையாற்ற வேண் டும் என்று தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதா வது:

இந்தச் சம்பவம் பேரினவாத நிகழ்ச்சி நிரலின் கீழ் பல்கலைக்கழக நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது மிகக் கவலைய ளிப்பதாகவும் வேதனையைத் தருவதாகவும் இருக்கின்றது. இந்த சம்பவத்தையும் இதனை மேற்கொண்ட பல்கலைக்கழக நிர்வாகத்தினர் உள்ளிட்ட பேரினவாத அரச இயந்திரத்தையும் தமிழ்மக்கள் பேரவையா னது வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழர்களை பொறுத்தவரை பல்கலைக்கழ கம் ஓர் அடையாளம் மட்டுமல்ல அது வரலாற்றை கடத்துகின்ற இடமாகவும் இருக்கின்றது. அங்கே இந்த சம்பவம் நடந் தேறி இருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. குறைந்தபட்சம் இறந்தவர்களைக்கூட நினை வுகூரமுடியாத நிலைமைக்கு தமிழர்களாகிய நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினர் பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சியினர் முன்னெடுக்கும் அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் தமிழ் மக்கள் பேரவையின் ஆதரவைத்தெரிவிப்ப தோடு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வினை யாற்ற வேண்டும் என்றும் பேரவை அழைக் கின்றது - என்றுள்ளது. (ம)



# தலைநகரில் பனிப் பொழிவு

கொழும்பில் அதிக பனிப் பொழிவு இன்று காலை காணப்பட்டது. இதனால் கடுமையான குளிருடனும் பனி மூட்டத்து டனுமான காலநிலை நிலவியது எனத் தெரியவருகிறது. (வ-இ)

# அண்ணன் மீது தம்பி துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, ஜன.10

குடும்பப் பிரச்சினையால் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தனது அண்ணன் மீது தம்பி ஒருவர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட சம்பவம் மாத்தளைவில்கமுவ பகுதியில் நேற்று இடம்பெற்றது.

சகோதரர்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்து வேறுபாடு மோதலாக மாறியதால் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்தவர் (வயது38) சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் இவரின் இளைய சகோதரர் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரியவருகிறது. இது குறித்த மேல திக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர். (ந-இ)

# கொரோனாவிலும் இனவாத அரசியல்

## கண்டிக்கிறார் ராஜித

கொழும்பு, ஜன.10

கொரோனா காரணமாக நாடு பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலை யில், அரசாங்கம் கொரோனாவால் மரணிப்ப வர்களை அடக்கம் செய்வதா எரிப்பதா என்ற இல்லாத பிரச்சினையைப் பிடித்துக் கொண்டி ருக்கின்றது. அடக்கம் செய்வதற்கு சிரேஷ்ட நிபுணர்கள் குழு அனுமதி வழங்கியிருந்தும் அரசாங்கம் வேண்டும் என்றே இழுத்தடிப்புச் செய்துவருகின்றது என எதிர்க்கட்சி உறுப்பி னர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாத் தொற்று நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அதைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர்.

என்றாலும் அரசாங்கத்தின் ஒரு சில நடவடிக் கைகளால், சுகாதார அதிகாரிகள் விரக்தியுறும் நிலையில் இருக்கின்றனர். கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லை.

கொவிட்டால் மரணிப்பவர்களை அடக்கம் செய்யலாம் என்று கொரோனாத் தொடர் பான விசேட மருத்துவ நிபுணர்கள் குழு தெளிவான அறிக்கை ஒன்றை அரசாங்கத் துக்கு கையளித்திருக்கின்றது. ஆனால் அர சாங்கம் அதை வைத்து இனவாத அரசியல் செய்துகொண்டிருக்கின்றது.

மரணிப்பவர்களை அடக்கம் செய்வதால் வைரஸ் நீரில் பரவாது என இலங்கை மருத் துவ சங்கம், மருத்துவ கல்லூரி மற்றும் பல சர்வதேச அமைப்புகள் தெளிவாக அறிவித்தி ருக்கின்றன. அதேபோன்று வைரஸ் தொடர் பில் இலங்கையில் இருக்கும் சிரேஷ்ட நிபு ணர்களும் அதை உறுதி செய்திருக்கின்றனர் என்றார். (ந-இ)







யாழ்ப்பாணம் – மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா இன்று காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

படங்கள் - ஐ.சிவசாந்தன்





# சிறுவர் பராமரிப்பு நிலைய அதிகாரிகளுக்கு இடமாற்றம்!

கொழும்பு, ஜன.10

வடமத்திய மாகாணத்தில் இயங்கிவரும் அவந்தி தேவி சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள அனைத்து ஊழியர்களும் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சிறுவர்கள் பலர் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளது எனவும் சிறுவர் விவகார அமைச்சுக்கு முறையிடப்பட்டது. இதை விசாரணை செய்வதற்கு தற்போது குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இவர்கள் அனைவரும் சுயாதீன விசாரணைக்காக இடமாற்றப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. (ற-இ)

# தொற்று நீக்கம்

கொழும்பு, ஜன.10

பாடசாலை கல்வி நடவடிக்கை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் மலையகத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் கிருமிதொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரி வித்துள்ளனர். அத்துடன், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளிலும் கிருமி தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வும் அவர்கள் தெரிவித்தனர். (ச-இ)



# கலாசார நிலையம் பிரதமரால் திறப்பு

கொழும்பு, ஜன.10

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் நிறுவப்பட்ட பொல்பிதிகம கலாசார நிலையம் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்சவால் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொது நிதியத்திலிருந்து 25 மில்லியன் ரூபா நிதி செலவில் இந்தக் கலாசார நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# 195 இலங்கையர்கள் நாட்டுக்கு வருகை

கொழும்பு, ஜன.10

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 195 இலங்கையர்கள் இன்று காலை நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

இதன்படி, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 68 பேரும், ஜப்பானில் இருந்து 50 பேரும், கட்டாரிலிருந்து 45 பேரும், மாலைத்தீவிலிருந்து 24 பேரும் மற்றும் ஆஸ்ரேலியாவிலிருந்து 8 பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ரி5)

# இலங்கைக்கு உக்ரைன் சுற்றுலாவிகள் வருவதை தடைசெய்க!

## சஜித் பிரேமதாச வேண்டுகோள்!

கொழும்பு, ஜன.10

உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதை அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கண்டியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உக்ரைன் தற்போது முடக்கப்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதை அரசாங்கம் தடுக்கவேண்டும்.

கொரோனா வைரஸை தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பின்பற்றாத சுற்றுலாப் பயணிகள் மூலம் சுற்றுலாத்துறைக்கு புத்துயிர் அளிக்க முயல்வது ஆபத்தானது. இதனால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

இதனால் உடனடியாக உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் - என்றார். (ற-இ)

# சிறை இடநெருக்கடி; கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, ஜன.10

கொரோனாத் தொற்று காரணமாக சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைக் குறைப்பதற்கு இதுவரை 10 ஆயிரத்து 65 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 60 வீதமானோர் போதைப் பொருள் தொடர்பிலான குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் என சிறைச் சாலைகள் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுவிக்கப்பட்ட கைதிகள் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விடுவிக்கப்பட்டனர் என சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே கூறியுள்ளார். இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்படுமாயின், கொரோனா சிகிச்சை நிலையத்தில் 14 நாள்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு, பின்னர் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தியே விடுவிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார். (ச-இ)



சுகாதார விதிமீறல் :

# வழக்குகள் 2,213

கொழும்பு, ஜன.10

நாடளாவிய ரீதியில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காமை போன்ற விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டுக்களில் இதுவரை 2 ஆயிரத்து 213 பேருக்கு எதிராக வழக்குகள் பதிவாகியுள்ளன என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மேல்மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சுற்றிவளைப்புக்களின் போது முகக்கவசம் அணியாத 2 ஆயிரத்து 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுள் 24 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் அனைவருக்கும் எதிராக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு சட்டவிதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ச-இ)

# கேகாலையில் அதிகளவிலான தொற்றாளர்கள் இனங்காணல்

கேகாலை, ஜன. 10

கேகாலை மாவட்டத்தில் அதிகளவில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்படுகின்றனர் என மருத்துவர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், கேகாலை மாவட்டத்தில் இனங் காணப்படுகின்ற கொரோனாத் தொற்றாளர்களில் பெரும்பாலானோருக்கு அதிக காய்ச்சல் நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இவ்வாறான நிலைமை இல்லை என சுட்டிக்காட்டிய அவர், இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (ரி5)




# பஸ் இலக்கத்தை உட்புறத்திலும் காட்சிப்படுத்துக

கொழும்பு, ஜன.10

கொரோனாத் தொற்று நோயாளர்களின் தொடர்புகளைக் கண்டறிய உதவிடும் பொருட்டு பஸ்ஸின் உட்புறத்தில் அதன் இலக்கத்தைக் காட்சிப்படுத்துங்கள் என தனியார் மற்றும் இ.போ.ச பஸ்களின் உரிமையாளர்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண கேட்டுள்ளார்.

பஸ்ஸில் பயணிப்போர் தாம் பயணிக்கும் பஸ்ஸின் இலக்கத்தை குறித்துக் கொள்ள இது உதவும் எனவும் தொற்றாளர் ஒருவர் அந்த பஸ்ஸில் பயணித்திருந்தால் மற்றைய பயணிகளுக்கு அறிவிக்கவும் மற்றும் தொடர்புகளைக் கண்டறியவும் இலக்கங்களை உட்புறம் காட்சிப்படுத்துவது உதவியாக இருக்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (ச-இ)

# தடுப்பூசிகளைப் பெற துரித நடவடிக்கைகள்

## ஜனாதிபதி தெரிவிப்பு

அம்பாறை, ஜன.10

வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசிகளில் ஒன்றை நாட்டுக்கு துரிதமாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அம்பாறை நடைபெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் நேற்றுக் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தியா, உலக சுகாதார அமைப்பு, சீனா, ரஷ்யா ஆகியவற்றிடம் இருந்து ஊசி மருந்துகளை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி தயாரானதும் உடனடியாக எமக்கு வழங்குமாறு நான் இந்திய பிரதமர் மற்றும் சீனா ஜனாதிபதி ஆகியோருக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளேன். உலக சுகாதார அமைப்பும், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளும் தடுப்பூசிகளில் ஒரு பகுதியை எமக்கு வழங்கும். மீதமுள்ள தொகை நாங்கள் விலை கொடுத்து கொள்வனவு செய்யவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

கொழும்பு மாநர எல்லையில்

# குறைவடைந்தது கொரோனா

கொழும்பு, ஜன.10

கொழும்பு மாநகர சபை எல்லையில் கொரோனாத் தொற்றுடன் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளன என கொழும்பு பிரதம மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

கொழும்பில் அன்றாடம் 375 முதல் 400 நோயாளர்கள் வரை பதிவாகினர். எனினும் தற்போது 90 முதல் 100 நோயாளர்கள் வரையே பதிவாகின்றனர் என அவர் மேலும் கூறினார்.

இருப்பினும் மாநகர சபை எல்லையில் சில இடங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

மத்தள விமான நிலையத்திலிருந்து

# கடலுணவுகள் நேற்று ஏற்றுமதி

கொழும்பு, ஜன.11

மீன், இறால் போன்ற கடல் உணவுகள் மத்தள சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று ஏற்றுமதி செய்யப்பட்டன என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஒரு தரமான கடல் உணவு ஏற்றுமதி தளமாக மாறியுள்ளது. அந்த வகையில் மத்தள சர்வதேச விமான நிலையம் கடல் உணவுகளை எதிர்காலத்தில் அதிகளவில் கையாளத் தயாராக இருக்கின்றது என விமான சேவைகள் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இனவாதத்தை தூண்டியே ஆட்சியைப் பிடித்தது அரசு

## எதிர்க்கட்சி எம்.பி கபீர் ஹாசிம் சாடல்

கொழும்பு, ஜன.10

இனவாதத்தை தூண்டியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய கொவிட்19 ஐ கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் பலவீனம் தொடர்பில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்தின் இனவாத பிரசாரத்துக்கு சாதகமாக ஈஸ்டர் தாக்குதலும் இடம்பெற்றது. தாக்குதல் சம்பந்தமான பின்னணிகள் வெளிவந்துக்கொண்டிருக்கின்றன. அதன் உண்மை நிலை விரைவில் வெளிப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றமைக்கு அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் மேற்கொண்ட வரிகுறைப்பே காரணம்.

அத்துடன் தற்போது கொவிட்டை பயன்படுத்திக்கொண்டு சம்பாதிக்க ஆரம்பித்திருக்கின்றனர். உக்ரேன் சுற்றுலா பயணிகளால் நாட்டுக்கு எந்த லாபமும் இல்லை. ஆனால் இவர்களை அழைத்துவந்த உதயங்க வீரதுங்க சம்பாதிக்கின்றார் எனத் தெரிவித்தார். (வ-இ)

# தயாசிறியுடன் தொடர்புடைய 118 பேர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, ஜன.10

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுடன் நெருங்கிப் பழகிய 118 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். சமய பெரியார்கள் ஐந்து பேர் உட்பட ஹெட்டிப்பொலவிலுள்ள அலுவலகத்துக்கு மக்கள் சந்திப்பு தினத்தன்று சமூகமளித்த 75 நபர்களே இவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், அமைச்சரின் குடும்ப அங்கத்தவர்கள், பாதுகாப்பு அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தயாசிறி ஹிக்கடுவப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுயதனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவரின் பிரத்தியேக செயலாளருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.(ற-இ)



## 8 மாதத்தில்

# வாகன இறக்குமதி கடும் வீழ்ச்சி

கொழும்பு, ஜன.10

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு கடுமையான வரையறைகள் விதிக்கப்பட்டதையடுத்து கடந்த 8 மாத காலப் பகுதிக்குள் வாகன இறக்குமதியில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று நிதியமைச்சின் அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 100 வீதம் குறைவான இறக்குமதி எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 8 மாத காலப்பகுதிக்குள் இரு கார்கள், 27 பேருந்துகள், 227 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஆனால் கடந்த 2019ஆம் ஆண்டு 106 கார்கள், 3309 பேருந்துகள் மற்றும் 21 ஆயிரத்து 203 மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அதேவேளை கடந்த ஆண்டு விவசாயத்துடன் தொடர்புபட்ட 233 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. ஆனால் கடந்த 8 மாத காலப்பகுதிக்குள் விவசாயத்துடன் தொடர்புபட்ட 354 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மோட்டார்வாகன இறக்குமதியின்மூலம் கடந்த 2019ஆம் ஆண்டு 81.5 பில்லியன் ரூபா வரி வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது. இந்தத் தொகை கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 43.1 பில்லியன் ரூபாவாகக் குறைந் துள்ளது எனவும் நிதி முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

# விற்றவற்றை மீட்பதற்கே இந்த அரசு பதவியேற்றது

### பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் கருத்து

கொழும்பு, ஜன.10

கடந்த அரசாங்கம் விற்பனை செய்த தேசிய வளங்களை மீண்டும் கையகப்படுத்தவே தற்போது அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது என பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணிக்க அரசாங்கத்திடம் நிதி இல்லை என்றால், அதனை சிறிது காலத்துக்கு அப்படியே வைத்திருங்கள். அதனை எதிர்கால சந்ததியினர் நிர்மாணித்துக் கொள்வார்கள். தற்போதைய அரசாங்கம் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்பனை செய்யும் என தான் நம்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## சிறைச்சாலை விருந்தினர் விடுதி நேற்றுத் திறப்பு!

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணச் சிறைச்சாலை வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட சிறைச்சாலை விருந்தினர் விடுதி ஒன்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய வால் நேற்று இரவு திறக்கப்பட்டது.

ஏனைய சிறைச்சாலைகளிலுள்ள சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரும் போது அவர்கள் தங்குவதற்காகவே இந்த விடுதி நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கொரோனாத் தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தவர்களுடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது. (ந-111)



## வாவிக்குள் பஸ் விழுந்து விபத்து

பொலநறுவை, ஜன 10

ஆடைத்தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ் லங்காபுர கெக்குலுகம பகுதியிலுள்ள 'பராக்கிரம வாவிக்குள்' விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில், 23 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ரி5)

## 1 லட்சத்து 30 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜன. 9

நாடளாவிய ரீதியில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்களை தொடர்ந்தும் வீடுகளிலேயே இருக்குமாறும், தேவையின்றி வீட்டை விட்டு வெளியேறுவதை தவிர்க்க வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண எச்சரிக்கை விடுத்தார். (ரி5)



# முடக்கத்தில் இருந்து எருக்கலம்பிட்டி விடுவிப்பு

மன்னார், ஜன.10

கொவிட் 19 தொற்று வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, கடந்த ஓரிரு தினங்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் தற்பொழுது முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கு 300 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து மன்னாருக்கு வந்த ஒருவருக்குக் கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் எருக்கலம்பிட்டியில் தங்கியிருந்த அந்த நபரின் குடும்பத்தினரிடம் கடந்த 4 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களில் ஐவருக்கு கொரோனாத் தொற்று இனம் காணப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டன. அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களே விடுவிக்கப்பட்டுள்ளன என்றார். (ப-60)

### யானைகள் அட்டகாசம்

# மலையாளபுரம் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு!

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம் கிராமத்துக்கு இரவு வேளைகளில் புகும் காட்டு யானைகள் மக்களின் தென்னை மரங்கள், நெல் வயல்களை அழித்து வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இது தொடர்பில் அந்த மக்கள் தெரிவித்ததாவது; கடந்த வியாழக்கிழமையும் இரவு எமது கிராமத்துக்குள் யானைகள் புகுந்தன. அவை எமது வாழ்வாதாரப் பயிர்களை அழித்துள்ளன. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. வங்கிகளில் கடனைப்பெற்று நெற்செய்கை மேற்கொண்டோம்.

அறுவடைக்கு இன்னும் ஒரு மாதம் உள்ள நிலையில் நெல் வயல்களை யானைகள் அழித்துள்ளன. இதனால் பெரும் வாழ்வாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ஐ-113)

## மின்சார வேலியில் சிக்கியவர் மரணம்

கொழும்பு, ஜன. 10

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்ஜோன் டிலரிகிவ் மேற்பிரிவு தோட்டத்தில், 5 பிள்ளைகளின் தந்தையொருவர் மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்தோனி சாமி (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஒவ்வொரு நாளும் தோட்டத்தை விட்டுச் செல்லும் போது மின்சாரத்தைத் துண்டித்துவிட்டு செல்வார், நேற்று அதனை துண்டிக்க தவறியதாலே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (ரி5)

# நாளைய ஹர்த்தாலுக்கு கல்வி சமூகம் ஆதரவளிக்குக

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10
நாளைய தினம் நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் அனைவரும் போராட்டம் வெற்றிபெற ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், 2009ஆம் ஆண்டு இறுதிப் போரின் போது மனிதப் பேரவலம் நடைபெற்றதன் அடையாளத்தை மறைக்க முயலும், இனவாத அரசின் செயற்பாட்டையும், அதற்குத் துணை போகும் அரச இயந்திரங்களின் செயற்பாடுகளையும் கண்டிக்கின்றோம்.
நாளை வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் ஆரம்ப நாளாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், பாரம்பரிய இனமொன்றின் அடையாளத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்க நினைப்பதற்கு எதிர்வினையாற்ற வேண்டியதும், குரல் கொடுக்க வேண்டியதும் கல்விச் சமூகத்தின் பொறுப்பான கடமையாகவும் உள்ளது.
எனவே நாளைய ஹர்த்தால் போராட்டத்துக்கு ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன், என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# ஜனநாயக ரீதியில் எங்கள் முடிவைச் சொல்கின்றோம்

## ஹர்த்தாலுக்கான ஆதரவு அறிக்கையில் அனந்தி

யாழ்ப்பாணம், ஜன. 10
ஒட்டுமொத்த தமிழினத்தின் நிலைப்பாட்டை ஜனநாயக வழியில், அழுத்தம் திருத்தமாக நாளைய தினம் பேரினவாத அரசுக்கு எடுத்துச் சொல்லும் விதமாக ஹர்த்தால் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
வடக்கும் தெற்கும் இணையவே முடியாதென்பதை பல்கலைக்கழக தூபி இடிப்பு விவகாரம் மீண்டும் எடுத்துக் காட்டி நிற்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ)

# தமிழ் பேசும் மக்களாக ஒன்றிணைந்து ஆதரிப்போம்

## ஹர்த்தாலுக்கான ஆதரவு அறிக்கையில் யாழ். முஸ்லிம் இளைஞர் கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10
வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களாக அனைத்து வழிகளிலும் ஒன்றிணைய முயற்சிப்போம் என்று பகிரங்க அழைப்பு விடுவதுடன், நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமையை கண்டித்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் தழுவிய ரீதியில் நாளைய தினம் இடம்பெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு முஸ்லிம் மக்கள் சார்பில் யாழ். முஸ்லிம் இளைஞர் கழகமாக நாமும் எமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்குகின்றோம்.
இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் 'தமிழ் பேசும் மக்களாக' ஒன்றித்து வாழ்வதே இரு சமூகங்களுக்கு மத்தியில் பலத்த பாதுகாப்பாக அமையும் என்பது நாம் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் உண்மையாகும். இதுவே எம்மை பிற சக்திகளின் சிறுபான்மை மக்களுக்கு எதிரான விடயங்களில் இரு தரப்பினரையும் பாதுகாக்கும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

# பிள்ளைகளை பாதுகாப்பாக வீடுகளில் தங்கவையுங்கள்

## ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து அதிபர்கள் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10
வடக்கு கிழக்கு மாகாணம் தழுவிய ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக வடக்கு மாகாணம் தரம் III அதிபர்கள் சார்பாக புதிய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சமூகம் சார்ந்து பிரதிபலிக்கவேண்டிய கடப்பாடு கொண்ட நாம் இந்த அநீதிக்கு எதிராக எதிர்ப்பை பதிவு செய்கின்றோம். நாளைய தினம், பெற்றோர்கள் பிள்ளைகளை பாதுகாப்பாக வீடுகளில் தங்க வைத்து ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்தச் சங்கம் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஒ)

## கடத்தப்பட்டு மோசமாக...

சிங்களவர்களால் கடத்தப்பட்ட தமிழ் பண்ணையாளர்களில் ஒருவர் மோசமாக தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏனைய ஐந்து பேரும் அம்பாறை பிராந்தியத்துக்கு உட்பட்ட மாகோ ஓயா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
பண்ணையாளர்கள் 6 பேர் சிங்கள சட்டவிரோத குடியேற்றவாசிகளால் நேற்றுக் கடத்தப்பட்டிருந்தனர் என்று தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.
மட்டக்களப்பு எல்லையிலுள்ள மயிலத்தமடு மற்றும் மாதவணை மேய்ச்சல் தரையில் பொலன்னறுவை, அம்பாறையிலுள்ள சிங்களவர்களை கோத்தபாய அரசு குடியமர்த்தியுள்ளதாக தமிழ் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இது குறித்து பாரம்பரிய கால்நடை வளர்ப்பாளர்கள் நடத்திய போராட்டங்கள் எதையும் அரசு கணக்கிலெடுக்கவில்லை. சுமார் 3 இலட்சம் கால்நடைகளின் மேய்ச்சல் தரையில் சிங்களவர்களை குடியமர்த்துவது தொடர்பில் எதிர்ப்பினை கிழக்கு ஆளுநரிடம் எழுப்பிய போதும், அவர் அதை கண்டுகொள்ளவில்லை.
'நேற்று கால்நடை பண்ணையாளர்கள் மூவர் தமது மாடுகளை தேடி சென்றனர். அவர்களை சிங்களவர்கள் விரட்டிய போது, இருவர் தப்பியோடி வந்து விட்டனர். ஒருவரை பிடித்த சிங்களவர்கள், அவரை கட்டி வைத்து கடுமையாக தாக்கியுள்ளனர். தப்பியோடி வந்த இரண்டு பண்ணையாளர்களும் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும் 5 பேர் அவர்களை தேடிச் சென்றனர். அவர்களையும் சிங்களவர்கள் பிடித்து வேறிடம் ஒன்றுக்கு கொண்டு சென்று, கட்டி வைத்து தாக்கியுள்ளனர்' என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.
அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறவினர்கள் பேசிய போது, தமக்கு நேர்ந்த கொடுமையை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் தொலைபேசியில் பேசியதை அவதானித்த சிங்களவர்கள், தொலைபேசிகளையும் பறித்து வைத்துள்ளனர். இதனால் பதட்டமான சூழ்நிலை மயிலத்தமடு மற்றும் மாதவணைப் பகுதியில் ஏற்பட்டுள்ளது. கடத்தப்பட்ட 6 பண்ணையாளர்களையும் தேடிச் சென்ற சக பண்ணையாளர்களையும் அத்துமீறி பயிர் செய்கையில் ஈடுபடும் சிங்களவர்கள் அச்சுறுத்தி துரத்தியதாகவும் அதனால் பண்ணையளர்கள் அச்சத்தில் திரும்பி வந்துள்ளதாக பண்ணையாளர்களின் தலைவர் தெரிவித்தார்.
சின்னத்தம்பி பாஸ்கரன், முத்துப்பிள்ளை சேந்தன், சுப்பிரமணியம் கோணேசன், பரசுராமன் மேகுலன், கிருபைராசா ருச்சுதன், சண்முகம் டயன்சன் ஆகிய ஆறுபேரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.
இந்த விவகாரம் பெரிதாகியதையடுத்து, கடத்தப்பட்ட 6 பேரையும் மாகோ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த சிங்கள விவசாயிகள், தமது பயிர்ச்செய்கையை அவர்களது மாடுகள் அழித்துள்ளதாகவும், அதற்கான நட்டஈட்டை பெற்றுத்தர வேண்டுமென்றும் முறைப்பாடு செய்துள்ளனர்.
அவர்கள் கட்டிவைத்து தாக்கியதில் படுகாயமடைந்த முத்துப்பிள்ளை சேந்தன், மாகோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மயிலத்தமடு மற்றும் மாதவணை எல்லை பகுதி, கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்டது. கடத்தியவர்களை சிங்கள விவசாயிகள் அங்குதான் ஒப்படைத்திருக்க வேண்டும். எனினும், தமது இஷ்டப்படி அம்பாறை பொலிஸ் உட்பட்ட மாகோ ஓயா பொலிஸ் நிலையத்தில் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்த கடத்தல் விவகாரத்திற்கு எதிராக, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்றனர். எனினும், அவர்களின் முறைப்பாட்டை பொலிஸார் ஏற்கவில்லை.
இதையடுத்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு அமைப்பாளர் சுரேஷ்;, பொலிஸாருடன் தர்க்கப்பட்டார். நீண்ட தர்க்கத்தின் பின்னரே, முறைப்பாடு ஏற்கப்பட்டது. முறைப்பாட்டை பதிவு செய்த பின்னர், உறவினர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வெளியில் கொட்டும் மழையிலும் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர். (ஒ,இ)

## தூபியை மீளக்கட்டுவாராம்...

'எனக்கு அதிக அரசியல் அழுத்தம் இருந்ததாக அவர் கூறுகிறார். அதற்கான ஆதாரங்களும் தன்னிடம் உள்ளதாக கூறினார். இந்த நினைவுத்தூபியை இடிக்க எனக்கு அழுத்தம் தந்தார்கள். இப்பொழுது பலர் தமக்கு தொடர்பில்லையென கூறுகிறார்கள். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அதை நான் பல்கலைகழக பேரவை கூட்டத்தில் வெளிப்படுத்துவேன். போராடும் மாணவர்களின் உணர்வு எனக்கும் உள்ளது. இந்த தூபியை இடித்தது எனக்கும் கவலைதான். அதை மீள அமைக்க உரிய வழிமுறைகளில் நான் தயாராக இருக்கிறேன். இது பற்றி மாணவர்களுடன் பேசவுள்ளேன். நாம் மீண்டும் தூபியை அமைப்பதற்கு உரிய அனுமதி பெறுவது உள்ளிட்ட விடயங்களில் தமிழ் அரசியல்வாதிகள் துணையாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்' என்று சித்தார்த்தன் தெரிவித்தார். (ஒ,இ)